**IN THE COURT OF THE SUB JUDGE, MELUR**
**DEPOSITION OF WITNESS**
**OS 186/2022**

**Name : Sayira Banu @ Sayira beevi**
**Father's Name :**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 06.06.2023**

**வா.சா.1 முதல் விசாரணை:-**

எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இவ்வழக்கின் வாதி. 06.10.1988ம் தேதிய அங்கையர்கண்ணி வகையறாவிடமிருந்து 1ம் இலக்க சொத்தை பொறுத்து நான் வாங்கிய கிரைய பத்திரத்தின் கணிணி நகல் வா.சா.ஆ.1. 06.10.1988ம் தேதிய 2,3 இலக்க சொத்தை பொறுத்து என் தாயார் வாங்கிய கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 1வது இலக்க சொத்தின் வீட்டு வரி ரசீது 6 எண்ணிக்கை வா.சா.ஆ.3. 1வது இலக்க சொத்திற்கு செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீது வா.சா.ஆ.4. எனது தாயார் நாகூர் அம்மாள் 20.03.1996ம் தேதி இறந்ததற்கான இறப்பு சான்று வா.சா.ஆ.5. எனது தகப்பனார் சிக்கந்தர் 09.03.2014ம் தேதி இறந்ததற்கான இறப்பு சான்று வா.சா.ஆ.6. 18.02.2022ம் தேதி வழங்கப்பட்ட என் தாயாரின் வாரிசு சான்று கணிணி நகல் வா.சா.ஆ.7. 28.02.2022ம் தேதி வழங்கப்பட்ட என் தகப்பனாருக்கு வாரிசு சான்று கணிணி நகல் வா.சா.ஆ.8. 28.04.2022ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் வா.சா.ஆ.9. அதை 14.05.2022ம் தேதி 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.10. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.